**அகுரண பிரதேச சபை - 2021**

-------------------------------------------------------------

**1. நிதிக் கூற்றுக்கள்**

----------------------------

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

------------------------------------------------------

அகுரண பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 172 (1) ஆம் உபபிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களிலிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அகுரண பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

-------------------------------------------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகை தரப்பினரின் பொறுப்புக்கள்**

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்)

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல்வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கணக்காய்வுச் சட்டத்தில் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குகின்றன.

**1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வேலை பூர்த்தி செய்யப்படாத ரூபா 855,000 ஆன 03 நிர்மாண வேலைகள் நிர்மாண கடன் கொடுத்தோர் மற்றும் மூலதனச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டதன் காரணமாக அந்த அளவில் மூலதனச் செலவினம் மற்றும் நிர்மாணக் கடன்கொடுத்தோர் நிதிக் கூற்றுக்களில் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | இது பொதுமக்களின் வேண்டுகோளின் பேரில் நிறைவேற்று வதற்கு அவசியமான இருந்ததால் கடன் கொடுத்தோராகப் பதிவு செய்யப் பட்டிருந்ததுடன் இப்போது உடன்படிக்கை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | வேலைகளைப் பூர்த்தி செய்து தொழில்நுட்ப உத்தியோகத்தரின் செய்யப்பட்ட வேலையின் பிரகாரம் முடிவுப் பெறுமதி மாத்திரம் கடன் கொடுத்தோராகக் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

**1.6.2. இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் காணப்படும் ரூபா 23,853,904 ஆன 03 சொத்து விடயங்கள் நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது மெய்மையாய்வு செய்ய முடியாதிருந்தது | நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் பட்டோலைகள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | குறித்த படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட பயன்பாட்டு ஆவணங்களுடன் கணக்காய்விற்குரிய சகல தகவல்களும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி சட்டம் | 01 ஹெக்டேயரிற்கு மேற்பட்ட காணியில் வர்த்தக நடவடிக்கைகளுக்காக துண்டு பிரித்து விற்கும் போது அக்காணியில் மொத்த அளவில் 10 வீதமான அளவொன்று பொது நடவடிக்கை களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்நிர்வாகம் பிரதேச உள்ளூராட்சி மன்ற நிறுவனத்திற்கு கையளிக்க வேண்டிய போதும் அகுரண சபை அதிகாரப் பிரதேசத்தில் பகுதிகளாக்கி விற்பனை செய்யப்பட்ட 25 ஏக்கர் 02 ரூட் 29 பேர்ச் அளவிலான 02 காணிப் பகுதி தொடர்பாக சபைக்கு கையேற்கப்பட வேண்டிய காணி பகுதி சபைக்கு கையேற்கப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுப்பதாக உரித்தாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் காணியில் அறிவித்தல் ஒன்றும் காட்சிப்படுத்தியுள்ளதாகக் குறிப்பிடப்பட்டிருந்தது. | சட்டத்தின் பிரகாரம் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 33,400,644 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 23,626,331 ஆக இருந்தது.

**2.2 வருமான நிர்வாகம்**

**2.2.1 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறு வீதவரி மற்றும் வீதவரி நிலுவை ரூபா 1,1700,204 ஆக இருந்ததுடன் ஆண்டில் அம்மீதியில் ரூபா 517,064 அதாவது 30 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டு இருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் வீதவரி மற்றும் வரிப்பட்டியலிடல் ரூபா 7,912,202 ஆக இருந்ததுடன் ஆண்டின் போது பட்டியலிடப்பட்டதிலிருந்து ரூபா 5,754,704 அதாவது 73 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,506,355 ஆன நிலுவைத் தொகை அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் அந்நிலுவை மீதிகளை அறவிடுவதற்கு பிரதேச சபை சட்டத்தின் 158 பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 மே 31 ஆம் திகதி வரையிலும் இந்நிலுவைத் தொகையில் ரூபா 1,083,171 தொகை அறவிடப்பட்டு உள்ளது. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவைத் தொகை அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | வீதவரி ஆதனங்கள் 05 ஆண்டுக்கொரு முறை மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2012 ஆம் ஆண்டின் பின்னர் வீதவரி ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக பல சந்தர்ப்பங்களில் மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | ஆதனங்கள் மதிப்பீடு உரிய திகதியில் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | பிரதேச சபை சட்டத்தின் 149 ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை சுற்றுலா சபையில் பதிவு செய்யப்பட்டிருந்த ஹொட்டெல்களின் வருடாந்த வருமானத்தின் ஒரு சதவீதத்திற்கு மேற்படாத வருமானமொன்று அறவிடப்பட வேண்டிய போதிலும் அக்குரண சபை பிரதேசத்தில் அமைந்துள்ள பதிவு செய்யப்பட்ட 02 ஹொடெல்களின் வருமானத்தை உறுதிப்படுத்தாமல் ரூபா 215,873 ஆன வருமானம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | குறித்த நிறுவனங்களில் கணக்கறிக்கைகளை உறுதிப்படுத்தித் தருமாறு சுற்றுலா சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதும் வெளித்தரப்பினருக்கு அவற்றை வழங்க முடியொதென குறிப்பிடப்பட்டுள்ளதால் 2021 ஆம் ஆண்டின் கணக்குகளை வழங்குமாறு குறித்த நிறுவனம் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நிலுவைத் தொகை அறவிடப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 திண்மக்கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதற்காக 5 ஏக்கர் 02 ரூட் 22.5 பேர்ச் அளவிலான காணியொன்று 2003 ஜுலை 26 ஆம் திகதி ரூபா 525,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அவ்விடத்தில் கழிவுப்பொருளை இடுவதற்காக முறையாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டின் சபை நிதியத்திலிருந்தும் மாகாண சபை நிதியத்திலிருந்தும் சேதனப் பசளைத் தொகுதி நிர்மாண நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாகவும் உக்கும் கழிவுகள் உக்குவெல பிரதேச சபைக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிலத்தை முறைப்படி கழிவுப்பொருள் கையகற்றலுக் காக தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொது நிதியத்தின் கீழ் அக்குரண பிரதேச சபையால் செயல்படுத்தப்படுவதற்காக ரூபா 5,500,000 பெறுமதியான 49 செயற்திட்டங்கள் தொடர்பாக உடன்படிக்கை கைச்சாத்திடல் அல்லது மதிப்பீடு தயாரித்தல் என்பவற்றிற்கு மாத்திரம் வரையறுக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அச் செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களை நிறைவேற்ற வேண்டும். |